# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## மகமெவுனாவ சதஹம் சேவாவ (கூட்டிணைத்தல்)

**மகமெவுனாவ சதஹம் சேவாவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ விஜயதாஸ ராஜபக்ஷ அவர்களால் 2011, பெப்புருவரி மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2011, சனவரி மாதம் 24 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[ 68 ஆம் சட்டமூலம் ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## மகமெவுனாவ சதஹம் சேவாவ (கூட்டிணைத்தல்)

## மகமெவுனாவ சதஹம் சேவாவவைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

"மகமெவுனாவ சதஹம் சேவாவ" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றம் ஒன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் இலங்கை, பொல்கஹவெல, வடுவாவ என்னும் இடத்தில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட சேவாவ எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக இருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

**1**. இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மகமெவுனாவ சதஹம் சேவாவைக் கூட்டிணைத்தல் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சேவாவ" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மகமெவுனாவ சதஹம் சேவாவின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "மகமெவுனாவ சதஹம் சேவாவ" என்ற பெயரின்கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும்.

மகமெவுனாவ சதஹம் சேவாவைக் கூட்டிணைத்தல்.

அத்துடன் அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்ற வும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :

(அ) பௌத்த சாசனத்தின் ஊடாக சகல துன்பங்களைக் களைவதற்கும், அதிலிருந்து மீட்சி பெறுவதற்கு புத்த பகவான் அருளிய போதனைகளை இலகுவில் அறிந்து கொள்ளும் வகையில் இலகு மொழிநடையில் போதிப்ப தும் பௌத்த சாசனத்தை மிளிரச் செய்தலும் ;

(ஆ) பௌத்த மதம் மற்றும் பௌத்த தியானம் பற்றிய விசேட அறிவையும் தெளிவையும் பாமர மக்களுக்கு வழங்குவதற்காக திரிபிடக நூலை சிங்கள மொழியில் மொழிபெயர்ப்பு செய்தல், மத நூல்கள், கெசட் நாடாக்கள் மற்றும் சீடிக்களை தயாரித்தல், விநியோகித்தல் மற்றும் அதற்கு ஊக்கமளித்தல் அத்துடன் விரிவுரைகள், மாநாடுகள், கலந்துரை யாடல்கள், செயற்களங்கள், வகுப்புகள், சம்மேளனங் கள், புண்ணிய கருமங்கள், விழாக்கள் மற்றும் வழிபாட்டு யாத்திரைகள் என்பவற்றை மேற் கொள்ளல், ஒழுங்கு செய்தல் அத்துடன் நடாத்துதல் ;

(இ) பௌத்த மத கோட்பாடுகளுக்கமைய வாழ்க்கையை கட்டியெழுப்பும் வகையில் கலாசார வளம்படைத்த மத குருமார்களை உருவாக்கல், பயிற்சியளித்தல் மற்றும் தினந்தோறும் மேற்கொள்ளும் மத கலாசார புண்ணிய கருமங்களை மேற்கொள்வதன் மூலம் பௌத்த மக்களுக்கு பௌத்த மதம் குறித்தும் தியான வழிமுறை களை உணர வைப்பதுடன், சமய வழிபாடுகளில் ஆர்வத்தை ஏற்படுத்தலும் ;

(ஈ) இலங்கையில் பல பாகங்களின் மகமெவுனா தியான கூடங்களை அமைத்து அவற்றின் மூலம் மத ரீதியான ஒழுக்க ரீதியான பிக்குமார்களுக்கு பயிற்சியளித்தல், பெண்களுக்கான அனகாரிக்க தியான கூடங்களை அமைத்தல் ;

(உ) இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள பௌத்த அல்லது பிற ஒழுங்கமைப்புகளுடன் சிநேகபூர்வ தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் உலகம் பூராவும் பௌத்த தர்மத்தை மேம்படுத்தல் ;

(ஊ) போதி ஞான சபை, மகா கருணா மன்றம், மகா கருணா சுவசேவா மன்றம், ஹரித்த சுவ மன்றம், புதுபுத்மாபிய தஹம் சேவா மன்றம் மற்றும் அவ்வாறான நிறுவனங்களை நிறுவி அவற்றின் மூலம் இலங்கையில் பின்னடைந்த பிரதேசங்களிலுள்ள பௌத்த வழிபாட்டுத் தலங்கள், பௌத்த கோவில்கள் ஆகியவற்றை முன்னேற்றுவதுடன், அவற்றைப் பேணிப் பாதுகாப்பதற்கான பங்களிப்பு வழங்கல், பௌத்த குருமாரின் நோய்நொடி மற்றும் நலனோம்பு சேவைகளை மேற்கொள்வதற்கு உதவியளித்தல் ;

(எ) நூல்நிலையங்கள், ஆராய்ச்சி நிலையங்களை நிறுவிப் பராமரித்தல், புத்தகங்கள், மஞ்சரிகள், வார மஞ்சரிகள் அத்துடன் பிற வெளியீடுகளை வெளியிடுதல், விநியோகித்தல், ஊக்குவித்தல் ;

(ஏ) பல வகையான பௌத்த விழாக்கள், வழிபாட்டு முறைகள், சுற்றுலா நிகழ்ச்சிகள், மதகலாசாரங்கள் போன்றவற்றை நாடுபூராவும் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தலங்களிலும் ஏனைய இடங்களிலும் நடாத்துதல் ;

(ஐ) பொல்கஹவெல வடுவாவயைத் தலைமையகமாகக் கொண்டு மகமெவுனாவ தியான கூடத்திலும் மகமெவுனாவ கூடத்தொகுதியின் சகல கிளைக் கூடங்கள், வழிபாட்டு மண்டபங்கள், புனித தந்த கோபுரம், குருமார்

தங்குமிடம், தியான கூடம், அலுவலகம், நூல் நிலையம், சீமாமாலக்க, அன்னதான மண்டபம், பொது வசதிகள், பிரவேச வழி, கட்டிடம் மற்றும் ஏனைய மதங்களின் அங்கங்கள் போன்றவற்றை அமைத்து அவை அமைந்துள்ள காணிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களைப் பாதுகாத்தல், பராமரித்தல், ஒழுங்கு செய்தல், பரிபாலித்தல் ;

(ஒ) அழைப்புகள் மற்றும் வழிபடும் போது வெளிநாடுகளிலுள்ள மத ரீதியான மண்டபங்கள், புனித தந்த கோபுரம், குருமார் தங்குமிடம், தியான கூடம், அலுவலகம், நூல்நிலையம், சீமாமாலக்க, அன்னதான மண்டபம், பொதுவசதிகள், பிரவேச வழி, கட்டிடம் மற்றும் ஏனைய மதங்களின் அங்கங்கள் போன்றவற்றை அமைத்து அவை அமைந்துள்ள காணிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களைப் பாதுகாத்தல், பராமரித்தல், ஒழுங்கு செய்தல், பரிபாலித்தல் ;

(ஓ) தம்பதிவவில் பௌத்த எழுச்சியை மேற்கொள்வதற்கு ஏதுவாக அங்கே வழிபாட்டு மண்டபங்கள், புனித தந்த கோபுரம், பிக்குகள் தங்குமிடம், தியான கூடங்கள், அலுவலகம், நூல்நிலையம், சீமாமாலக்க, அன்னதான மண்டபம், பொதுவசதிகள், பிரவேச வழி, கட்டிடம் மற்றும் ஏனைய மதங்களின் அங்கங்கள் போன்றவற்றை அமைத்து அவை அமைந்துள்ள காணிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களைப் பாதுகாத்தல், பராமரித்தல், ஒழுங்கு செய்தல், பரிபாலித்தல் ;

(ஔ) மேலே சொல்லப்பட்ட குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை எய்துவதற்கு உகந்ததான அல்லது இடைநேர்விளைவான ஏனைய எல்லாக் காரியங்களையும் கருமங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4**. (அ) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல், கட்டுப்பாடு மற்றும் நிருவகித்தல் கூட்டுத்தாபனத்தில் அப் போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய தேர்ந்தெடுக்கப்படும் அலுவலர்களைக் கொண்ட (இதனகத்துப்பின்னர் ''கட்டுப் பாட்டுப் பொறுப்புச் சபை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) கட்டுப் பாட்டுப் பொறுப்புச் சபைக்கு இச்சட்டத்தினதும் ஏனைய ஏற்பாடு களுக்கும் அமைய பொறுப்பு வழங்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இப்பிரிவின் (அ) உட்பிரிவில் உள்ளது எது எப்படியிருப்பினும், மன்றத்தின் கட்டுப்பாட்டுப் பொறுப்புச் சபையின் ஆரம்ப பிரதான போஷகரான சங்கைக்குரிய உயர்குரு கிரிபத்கொட ஞானானந்த தேரர் தலைவர் ஆதல் வேண்டும்.

(இ) கூட்டுத்தாபனத்தின் முதலாவது கட்டுப்பாட்டுப் பொறுப் புச்சபை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த மன்றத்தின் நிறைவேற்றுச் சபையின் உறுப்பினர் களாக புரிந்தவர்களையும் ஏனைய உறுப்பினர்களையும் கொண்டி ருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**5**. கூட்டுத்தாபனத்தால் காலத்துக்குக் காலம் சபையின் கூட்டத்தில் வாக்களிக்கும் கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது வேறேதே னும் எழுத்திலான சட்டங்களுக்கும் ஒவ்வாதனவாகவிராத பின்வரும் விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறை யானதாதல் வேண்டும் :-

(அ) கட்டுப்பாட்டுப் பொறுப்பு சபைக்கு உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்களை விலக்குதல் அல்லது அவர்கள் பதவி விலகுதல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், உப முகவர்கள் மற்றும் உபநிருவாகக் குழுவை நியமித்தல், அவர்களின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் மற்றும் ஆளுமை ;

(இ) கட்டுப்பாட்டு பொறுப்பு சபையின் உறுப்பினர்களைத் தேர்ந்து நியமித்தல், அவர்கள் விலகுதல், பதவி விலகுதல், பதவியிலிருந்து நீக்குதல், விலக்குதல் மற்றும் அவர்களின் அதிகாரங்கள், பணிகள் ;

(ஈ) சதஹம் சேவாவின் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கை முறைகள், அப்படியான கூட்டங்களைக் கூட்டுதலும் நடாத்துதலும், கூட்டங்களின் நேரங்கள், கூட்டம் தொடர்பான அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரல், கூட்டநடப்பெண், கூட்டங்களில் வாக்களித்தல், அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் குறிக்கோள்களை எய்துதலும்.

கூட்டுத்தாபனத்தின் வருமானம், ஆதனங்கள் என்பவற்றின் பயன்பாடு.

**6**. ஏதேனும் வகையில் கிடைக்கப்பெற்ற கூட்டுத்தாபனத்தின் வருமானமும் ஆதனமும் இதன்கண் தரப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பகுதி எதுவும் பங்குலாபம், அன்பளிப்புக் கொடை அல்லது வேறு வகையில் இலாபமாக கருதி கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ, மாற்றப்படுதலோ ஆகாது.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7**. (1) கூட்டுத்தாபனத்துக்கு அன்பளிப்பு, நன்கொடை, மரணசாசன ஆதன அளிப்பு, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையாகக் கிடைக்கப்பெற்ற எல்லாப் பணங்களும் சபை தீர்மானிக்கக்கூடிய ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) சபை அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் புரிகையிலும் அதனால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**8**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத் தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றிய முறை யான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில், ''தகைமைபெற்ற கணக்காய்வாளர்'' என்பது-

(i) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத் தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்ப தோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிய வென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவருமான ஆள் ஒருவர் ;

(ii) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவராகவும் இருக்கின் றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று

எனப் பொருளாகும்.

*மன்றத்தினால் செலுத்தப் படவுள்ள தனிசுகளும் மன்றத்திற்குச் செலுத்தப்பட வுள்ள தனிசுகளும்.*

**9**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குரிய எல்லாக் கடன்களும், பொறுப்புக்க ளும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்ப துடன் அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும், செலுத்தப்படுதற்குரிய ஒப்பப் பணங்கள், உதவு தொகைகள் ஆகியவனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**10.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, கொடுத்துமாற்றல், இறுதி விருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள அல்லது பொறுப்பிக்கவுமுள்ள முழுத் தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும். சகல ஆதனங்களும் கூட்டுத்தாபனத்தால் மாத்திரமே வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, பிரதான போஷகரான குருவானவர் அல்லது பொருளாளர் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் கலைக்கப் படுவதன் மீது எஞ்சியுள்ள ஆதனங்கள்.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மீது அதன் எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் ஏதேனும் நிதி அல்லது ஆதனம் எஞ்சியிருப்பின் அவை கூட்டுத்தாபனத்தின் எந்தவொரு உறுப்பினரிடையேயும் பகிர்ந்தளித்தல் ஆகாது. எனினும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடையதும், ஏதேனும் வருமானம் அல்லது பங்குலாபம், அதன் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளித்தலை சட்டரீதியாக தடை செய்யப்பட்டுள்ளதுமான சங்கத்திற்கோ அல்லது சங்கங்களுக்கோ அத்தகைய நிதி அல்லது ஆதனத்தைக் கையளித்தல் வேண்டும். இவை எல்லாம் கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுப் பொறுப்பு சபையின் அனுமதியின்கீழ் இடம்பெறுதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்